Registered as a Newspaper
பக்கங்கள் - 12
விலை - ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 268
செவ்வாய்க்கிழமை
20 ஒகஸ்ட் 2024
ஆவணி 04 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"எங்கட ஆக்கள் நல்லாத்தான் விவாதத்துக்கு வருவினம் கண்டியளோ"

ரணில், அநுர, சஜித், நாமல், திலித், அரியநேந்திரன்

# ஆறு வேட்பாளர்கள் நேருக்குநேர் விவாதம்

## அமெரிக்கப் பாணியில் பவ்ரல் முயற்சி

கொழும்பு, ஓகஸ்ட் 20

ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும், பிரதான வேட்பாளர்களிடையே நேரடி விவாதமொன்றை நடத்த முன்னெடுப்புகள் இடம்பெற்று வருவதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

11

## மூன்று யுவதிகள் கைது

யாழ்., ஓக. 20

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் தங்கியிருந்த மூன்று

11

## இதுவரை 631 முறைப்பாடுகள்

கொழும்பு, ஓக. 20

ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில், இதுவரை 631 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று

12

## மக்களின் பொருளாதாரச் சுமை எங்கள் ஆட்சியில் நீக்கப்படும்!

### சஜித் வாக்குறுதி

கொழும்பு, ஓக. 20

நாட்டு மக்கள் மீது தற்போது ஏற்றப்பட்டுள்ள அதீத சுமைகள், எங்களின் ஆட்சியில் நீக்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் தெரிவித்துள்ளார்.

11

## மனிதப் புதைகுழிகளுக்காக நீதிகோரி இன்று போராட்டம்

விரிவு :- பக். 11

## நாமலின் வெற்றிக்காக நாடெங்கிலும் பரப்புரை

கொழும்பு, ஓக. 20

ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்சவின் வெற்றிக்காக நாடு முழுவதும் தேர்தல் பரப்புரைகள் முன்னெடுக்கப்படும் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அறிவித்துள்ளார்.

11

## ஆட்சியைப் பொறுப்பேற்க பயந்தோடியது நானல்ல!

### அநுரகுமார ஆணித்தரம்

கொழும்பு, ஓக. 20

பொருளாதார நெருக்கடி நேரத்தில் மஹிந்த பதவி விலகிய போது, நெருக்கடியைத் தீர்த்து வைக்கத் தயார் என ஜனாதிபதி கோத்தாபயவுக்கு கடிதம் எழுதியவர்கள்

11

## காணாமல் ஆக்கப்பட்டோர் விசாரணை முற்றுமுழுதான ஏமாற்று நாடகமே!

### விசாரணை அதிகாரியிடம் இடித்துரைப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 20

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணை ஏமாற்று நாடகம். காணாமல் ஆக்கப்பட்டமைக்கு இறுதி யுத்தக் களத்தில் இருந்த படைத்தளபதி, இராணுவத்தளபதி, பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரே சாட்சி. அவர்களை அழைத்துவாருங்கள் பதில் சொல்கிறோம் என பருத்தித்துறையில் விசாரணை மேற்கொண்ட அதிகாரியிடம் பாதிக்கப்பட்டவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

11

ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர்

## ரூ.186 கோடி வரை செலவு செய்யலாம்

கொழும்பு, ஓக. 20

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரால் ஆகக்கூடியது 186.8 கோடி ரூபா வரையில் செலவு செய்ய முடியும் எனத் தேர்தல்கள் திணைக்களம்

12




றைனோ சிமென்ட் ரூப்பிங் ஷீட்
சிறந்த விலைக்கு நீண்ட காலம் பாவிக்கக்கூடிய கூரை
RHINO
60 YEARS
www.rhino.lk
ரூ. 3,955/- இலிருந்து துரித அழைப்பு 0115748728
• இலங்கையின் முதற்தர ரூப்பிங் மற்றும் சீலிங் ஷீட் • 60 வருட நம்பிக்கை




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கு இணைப்பு ஒருபோதும் சாத்தியமில்லை

நாமல் ராஜபக்ச திட்டவட்டம்



**கொழும்பு, ஓக.20**

**வடக்கு, கிழக்கு இணைப்புக்கு ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது என்று திட்டவட்டமாக அறிவித்துள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி ஜனாதிபதி வேட்பாளரான நாமல் ராஜபக்ச.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மக்களால் ஏற்றுக்கொள்ளப்படும் அதேபோல நாட்டைப் பாதுகாக்கக் கூடிய கொள்கைத் திட்டம் முன்வைக்கப்படும். எமக்கு கிராமிய மட்டத்திலான மக்களுடன்தான் கொடுக்கல் வாங்கல் உள்ளது. அந்தவகையில் மொட்டுக் கட்சி தற்போது பலமடைந்துவருகின்றது. தேர்தல் காலங்களில் நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஏனைய கட்சிகளைப்போல நாம் கொள்கைகளை மாற்றப் போவதில்லை.

வடக்கில் உள்ள இளம் தலைமுறையினர் என்னை நம்புகின்றனர். அவர்களிடம் நான் உண்மை நிலைமையை கூறிவருகின்றேன். எம்மால் செய்யக்கூடிய விடயங்களை நிச்சயம் செய்வோம். குறிப்பாக பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்கமுடியாது. வடக்கு, கிழக்கு இணைப்புக்கும் இடமில்லை. இந்நாட்டை பிரிக்க முடியாது. வடக்கு மக்களிடம் யதார்த்தத்தைகூறி அரசியல் நடத்துகின்றோம்.

தேர்தலுக்காக பொய்யுரைக்கவில்லை-என்றார். (எ-44)

# கட்சித் தாவலுக்கு முற்றுப்புள்ளி!

அநுர திட்டவட்டம்



கொழும்பு, ஓக.20

கட்சி தாவும் தவளை அரசியலுக்கு தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் முடிவுகட்டப்படும் என்று ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமாரதிஸாநாயக்க தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தப் பக்கம், அந்தப் பக்கம் என கட்சித் தாவல்கள் தற்போது இடம்பெற்றுவருகின்றன. இப்படியான தவளை அரசியலை நாட்டு மக்கள் கடுமையாக எதிர்க்கின்றனர். எனவே, தவளை அரசியலுக்கு முடிவுகட்டவேண்டும்.

எமது நாட்டுக்கு கொள்கை அடிப்படையிலான அரசியலே தேவைப்படுகின்றது. அந்த வழியிலேயே எமது அணி பயணிக்கின்றது. தாவும் அரசியல் தவளைகளுக்கு எமது அணியில் இடமில்லை.

இவ்வாறு தாவும் தவளைகள் இணைந்து கூட்டணிகள் அமைத்திருந்தாலும் அவை எமக்கு சவாலாக அமையாது. கட்சி தாவினால் நாடாளுமன்ற உறுப்புரிமையை இரத்துச் செய்வதற்குரிய சட்டம் இயற்றப்படும். தற்போது அந்தச்சட்டம் இருந்தாலும் அதனை பலப்படுத்தும் வகையில் திருத்தம் கொண்டுவரப்படும்.

அசிங்கமான அரசியல் கலாசாரத்துக்கு முடிவு கட்டப்படும் - என்றார். (அ-ஒ,44)



# ஹரின்– மனுஷவுக்கு புதிதாகப் பதவிகள்!

கொழும்பு, ஓக.20

முன்னாள் அமைச்சர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் ஜனாதிபதியின் ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். விளையாட்டு, காணி மற்றும் சுற்றுலா விவகாரங்களுக்கான ஆலோசகராக ஹரின் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளதுடன், தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான ஆலோசகராக மனுஷ நாணயக்கார நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசமைப்பின் 41(1) சரத்தின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் இந்த நியமனங்கள் ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்கவால் வழங்கப்பட்டுள்ளன. (எ-இ)

# தேர்தல் நடவடிக்கையில் 2,25,000 அரச ஊழியர்கள்



கொழும்பு, ஓக.20

தேர்தல் நடவடிக்கைகளுக்காக இம்முறை இரண்டு இலட்சத்து 25 ஆயிரம் அரச ஊழியர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று தேர்தல் ஆணைக்குழுவின் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்னாயக்க தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

13 ஆயிரம் வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு இடம்பெறும். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களுக்கும் சின்னங்கள் வழங்கப்பட்டுள்ளன. நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை நீதியாகவும், நியாயமாகவும் நடத்திமுடிப்பதற்குரிய அத்தனை ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணைக்குழு செய்து வருகின்றது-என்றார். (எ-44)

# ஐஸ் போதையுடன் ஒருவர் கைது

அங்குலான பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபரொருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேல் மாகாணத்தின் தெற்கு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரிடமிருந்து 10 கிராம் 200 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. (எ-இ)

# சம்பளத்தை உயர்த்த 185 பில்லியன் தேவை



கொழும்பு, ஓக.20

அரச ஊழியர்களின் சம்பளத்தை பத்தாயிரம் ரூபாவால் அதிகரிப்பதற்கு 185 பில்லியன் தேவை என சிரேஷ்ட திறைசேரி உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

2025 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் இதற்கான முன்மொழிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், சர்வதேச நாணய நிதியம் பரிந்துரைத்த வரி வருமானங்களை ஈட்டிக்கொண்டால் சம்பளத்தை அதிகரிப்பதில் எதுவிதப் பிரச்சினையும் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-25,6)

# ஹரினுக்கு புதிய பதவி ஐ.ம.சக்தி முறைப்பாடு

கொழும்பு, ஓக.20

உயர்நீதிமன்றின் உத்தரவுக்கமைய, அமைச்சுப் பதவியிலிருந்து விலகிய ஹரின் பெர்னாண்டோவுக்கு அவர் பதவி வகித்த அமைச்சுகளில் ஆலோசகர் பதவி வழங்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் சட்ட கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த நியமனம் தொடர்பில், தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது என்று அந்த கூட்டமைப்பின் கொழும்பு மாவட்ட சட்ட செயலாளர் சட்டத்தரணி துசித்த குணசேகர தெரிவித்துள்ளார்.

வேட்புமனு தாக்கல் செய்த பின்னர், ஜனாதிபதி ஆலோசகர் பதவிக்கு ஹரின் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார். உயர்நீதிமன்றின் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில், மீண்டும் அவர் வகித்த அமைச்சுகளில் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளமை தேர்தல் சட்டத்தை மீறுவதாகும் என சட்டத்தரணி துசித்த குணசேகர குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# தமிழர்களை கைகோர்க்க அழைக்கிறார் கம்மன்பில



கொழும்பு, ஓக.20

தமிழர்களின் மீதும் அவர்களின் கலாசாரத்தின் மீதும் எமக்கு பற்று உள்ளது. தமிழர்களுக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்லர். ஆனால், நாட்டை பிளவுபடுத்தும் பிரிவினைவாதத்தை தூண்டும் இனவாதிகளை நாங்கள் எதிர்க்கிறோம். இனவாதமற்ற நாட்டை உருவாக்க தமிழர்கள் எம்முடன் கைகோர்க்க வேண்டும்.

-இவ்வாறு பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற சர்வஜன சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீரவின் முதலாவது பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கில் நீங்களும், தெற்கில் நாங்களும் ஒரே குடும்பத்தின் பிள்ளைகள். இரு தரப்பினருக்கும் இடையில் கலாசாரம், மொழி என்ற அடிப்படையில் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

வடக்கு அரசியல்வாதிகள் இனவாதக் கருத்துகளை குறிப்பிட்டுக்கொண்டு தங்களை வளப்படுத்திக்கொள்கிறார்கள். அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் மாத்திரமே பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும்- என்றார். (எ-45)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக.20

சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தில் வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டுச் சொற்பொழிவு சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் சனிக்கிழமை தொடக்கம் செப்ரெம்பர் 2ஆம் திகதி திங்கட்கிழமை வரை தினமும் பி.ப 6 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் சைவப்புலவர்கள் செ. த. குமரன், க. கைலநாதன், ச. முகுந்தன், பொன். சந்திரவேல், சி. கா. கமலநாதன், இளஞ்சைவப்புலவர்கள் ச. நவநீதன், க. கயிலைவாசன், நித்திய பாபுதரன், ஆகியோரின் சொற்பொழிவும், சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ரி)

***

யாழ்ப்பாணம், ஓக.20

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகச் சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிகாமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 19 நவாலி தெற்கு திருவருள்மிகு ஸ்ரீ நாகராஜா ராஜேஸ்வரி அம்பாள் திருக்கோவில் பிரதான மண்டபத்தில். எதிர்வரும் வெள்ளிக்கிழமை பி.ப 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சொற்பொழிவில் இளஞ்சைவப்புலவர் பிரசங்கச்சுடர் க. கயிலைவாசன் 'மாணிக்கவாசகரும் திருத்தசாங்கமும்' எனும் விடயப் பொருளில் சொற்பொழிவும், சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஏ-45)

***

யாழ்ப்பாணம், ஓக.20

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையும், பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனின் தலைமையுரையும், சைவப்புலவர் திருமதி சண்முகவடிவு தில்லைமணி 'சைவ சமய வளர்ச்சியில் மகளிர்' எனும் விடயப்பொருளில் சொற்பொழிவும், சொற்பொழிவில் இருந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஏ-ரி)

# நல்லூர்த் திருவிழாவின் 12 ஆம் நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக 20

நல்லூர்க்கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த திருவிழாவின் 12 ஆம் நாள் நிகழ்வுகள் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் 8 ஆவது குருபீடாதிபதி ஸ்ரீ வேதவித்தியாசாகரர் சுவாமிகள் தலைமையில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர், இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் சீடர் ஆன்மிகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலையில், திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இன்று மாலை 4 முதல் இரவு 8 மணி வரை இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம அதிதியாக கைதடி வடக்கு மாகாணசபை பிரதம செயலாளர் இ. இளங்கோவன், சிறப்பு அதிதியாக யாழ். பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீட இந்து நாகரிகத்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் சி. ரமணராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

புற்றளை சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை, தும்பளை நெல்லண்டை அறநெறிப் பாடசாலை, பசுபதீஸ்வரர் ஆலய கலைப் பயிற்சி நிலைய அறநெறிப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். கீதவாஹினி இசைக்கல்லூரி வழங்கும் குழு இசை நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ஏ-25)

## பண்பாட்டுப் பெருவிழா

சாவகச்சேரி, ஓக.20

தென்மராட்சிப் பிரதேச செயலகமும், தென்மராட்சிப் பிரதேச கலாசாரப் பேரவையும், சாவகச்சேரி பிரதேசசபையும் இணைந்து நடத்தும் பண்பாட்டுப் பெருவிழா வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வரணி கலாசார மண்டபத்தில் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சாவகச்சேரி பிரதேச செயலகத்தின் செயலர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை செயலர் மற்றும் இளைஞர் விவகார அமைச்சு வடக்கு மாகாணம் ம.பற்றிக் டிறஞ்சன் பிரதம விருந்தினராகவும், பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பிரதிப்பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஷ், யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பொ.ஸ்ரீவர்ணன், சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் கதிர்காமநாதன் சந்திரகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், மாவட்ட சிரேஸ்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி சுகுணலினி விஜயரத்தினம், கலாபூசணம் கந்தையா சந்திரகேது வரணி ஆகியோர் விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பெருவிழாவில் பாரம்பரிய நிகழ்வுகள் இடம்பெறுவதுடன் கலைச்சாகரம் மற்றும் இளம் கலைஞர் விருதுகளும் வழங்கப்படவுள்ளன. (ஏ-45)

## விழிப்புணர்வு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.20

இளைஞர் யுவதிகளை வினைத்திறனான, செயற்திறன் மிக்க ஒரு பிரஜைகளாக உருவாக்கும் நோக்கத்தோடு இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் விழிப்புணர்வு நிகழ்வு யாழ். பண்ணை கடற்கரையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது யாழ்.சங்கானை பிரதேச செயலகத்துக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட சமூகமட்ட மற்றும் இளைஞர் கழகங்களுடைய தலைவர்கள் ஒருங்கிணைக்கப்பட்டு நடத்தப்பட்ட சித்திரப்போட்டியில் வரையப்பட்ட படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. (ஏ-25,20)

## கூட்டுப்பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஓக.20

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் யாழ்ப்பாணம் நல்லூர்க்கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வுகள் செப்ரெம்பர் 2ஆம் திகதி திங்கட்கிழமை வரை நடைபெறவுள்ளது. இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் பஜனைக்குழுவினரின் பஜனை நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது. (ஏ-45)




## அலையென எழுந்து அடிபணிவோம்

நல்லைக்குமரன் திருநாமம் சொன்னால் எந்த
நாளுமே இன்பமயமாகுமே தன்னால்
(நல்லை)

அல்லல்கள் தீருகுன் இணையடி
தொழுவமே நல்லை
ஐயனின் வீதியில் அலையென எழுவமே
(நல்லை)

எல்லையில்லாத அருளின்
இமயம் என்றால் அது
எங்கள் நல்லூர் பதியை நாடிச் சென்றால்
மெல்ல மெல்ல நமது இல்லம் எங்கும் நல்ல
மேன்மை தரும் குகன் அருள் பொங்கும்
(நல்லை)

இல்லையென்பதே இன்றி எங்கும்
நிறைவான் அன்பர்
இதயங்களில் வந்து உவந்து
உறைவான் எங்கள் (நல்லை)

தொல்லை தீர்க்கும் வெள்ளை
மனத்தால் தூயவன்
துதித்துப் பணிவோர்க்கு என்றென்றும் நேயவன்
(நல்லை)


வள்ளலின் வேல் கண்டு
வினையெலாம் நடுங்குமே இந்த
வையமெல்லாம் வேல்
முனையினில் ஒடுங்குமே

தெள்ளு தமிழ் குகனை
தினம் தினம் பணிவமே தமிழ்
சேந்தன் பதம் போற்றி
திருநீறு அணிவமே
(நல்லை)

■ ஆனையூர்க்கவிராயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம்
23.04.1992

மறைவு
20.08.2023

## திரு.S.B. மனோஜ்குமார்
## (MANOJ / BENSON)

நண்பா நீ எங்களை விட்டு பிரிந்தாலும்,
எங்களை விட்டு மறைந்தாலும்
நாங்கள் நினைத்தவுடன் கண்களில்
இருப்பாய் கண்ணீராக......
உன் இதயம் இந்த உலகில் இல்லா விட்டாலும் உன்
நினைவில் தான் எங்கள் இதயமே துடிக்கின்றது...
என்றும் நீங்கா நினைவுகளுடன்...

தகவல் Darbar Restaurant மற்றும் நண்பர்கள்

# குப்பைகளால் சூழல் பாதிப்பு

கொழும்பு, ஓக.20

எல்ல, வெல்லவாய வீதியில் அமைந்துள்ள இராவணன் நீர்வீழ்ச்சிக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் பெறுப்பற்ற விதத்தில் குப்பைகளை போடுவதால் அந்தப் பகுதியின் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்துள்ள இராவணன் நீர்வீழ்ச்சியைக் காண தினமும் பெருமளவான மக்கள் வருகின்றனர். இராவணன் நீர்வீழ்ச்சி சரணாலயத்தில் ஏராளமான விலங்குகள் மற்றும் பறவைகள் வாழ்கின்றன. அங்கு போடப்படும் குப்பைகளை உண்பதால் விலங்குகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படுகின்றது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (எ-இ)

# நீடிக்கிறது சீரற்ற வானிலை தயார் நிலையில் மீட்புக்குழு

கொழும்பு, ஓக.20

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையால் களுத்துறை மாவட்டத்தின் பரகொட பகுதிக்கு நிவாரண நடவடிக்கைகளுக்கு குழுவொன்று அனுப்பப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தின் புளத்சிங்கள பிரதேசத்தில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதால் பொது மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக வெள்ள நிவாரணக் குழு பரகொட பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அவசர உதவி நடவடிக்கைகளை முன்னெடுக்க இலங்கை கடற்படையின் நிவாரண குழுக்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# கமலா ஹாரிஸுக்கு அதிகரிக்கும் ஆதரவு

நியூயோர்க், ஓக.20

அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் நிலையில் குடியரசுக் கட்சியின் வேட்பாளரான டொனால்ட் ட்ரம்பைவிட கமலா ஹாரிஸ் கணிசமானளவு முன்னிலை வகிக்கின்றார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வோஷிங்டன் போஸ்ட், ஏபிசி நியூஸ்இப்சோஸ் கருத்துக் கணிப்புகளில் கமலா ஹாரிஸ் முன்னிலை வகிக்கின்றமை தெரியவந்துள்ளது.

ட்ரம்பை விட கமலா ஹாரிஸ் நான்கு புள்ளிகள் முன்னிலை வகிப்பதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஜனநாயகக் கட்சியினருக்கு இதுவொரு கணிசமானளவு வளர்ச்சியாகும்.

அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தலுக்கான காலம் நெருங்கும் நிலையில் பிரதான இரு வேட்பாளர்களான ஹாரிஸ் மற்றும் ட்ரம்ப் இடையேயான பிரசார நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் பென்சில்வேனியா, மிச்சிகன், விஸ்கான்சின், அரிசோனா, ஜார்ஜியா, நெவாடா மற்றும் வட கரோலினா ஆகிய ஏழு முக்கிய மாநிலங்களில் ஹாரிஸ் மற்றும் டிரம்ப் 50:50 என சமநிலையில் உள்ளனர் என்று சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. (எ-இ)



நானாட்டான் ஸ்ரீ செல்வமுத்துமாரியம்மன் ஆலயத் தேர்த் திருவிழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (எ-45-213)





வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் குரோதி வருட மஹோற்சவப் பெருவிழாவை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சிறப்பு ஆன்மீக நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அதில் 13 ஆம் திருவிழாவான கடந்த வெள்ளிக்கிழமை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் திருமதி வினோதினி சிறீமேனன் கலந்துகொண்டு ஆன்மீகச் சொற்பொழிவாற்றினார். (ச-66)



சாவகச்சேரி, செருக்கல்பதி அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய தேர்த் திருவிழா கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. (எ-ரி)



# கிளி.மத்திய கல்லூரியில் சாடிப் பயிர்ச்செய்கை

யாழ்ப்பாணம், ஓக. 20

மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக கிளிநொச்சி மத்திய கல்லூரியில் மேற்கொள்ளப்பட்ட சாடிப் பயிர்ச்செய்கைக்கான மதிப்பீட்டு நிகழ்வுகள் கல்லூரி அதிபர் ச.பூலோகராஜா தலைமையில் அண்மையில் நடைபெற்றன.

வகுப்புரீதியாக மேற்கொள்ளப்பட்ட சாடிப் பயிர்ச்செய்கையில் இயற்கைப் பசளை, இயற்கை பீடைக் கட்டுப்பாட்டு முறைகள் பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஈழத்தமிழர்களும் இந்தியக் குடியுரிமையும்!


அயல்நாடுகளில் இடம்பெறும் வன்முறைகள் மற்றும் துன்பங்கள் காரணமாக, இந்தியாவுக்குள் தஞ்சமடைந்த பல்லாயிரம் மக்களுக்கு குடியுரிமைத் திருத்தச்சட்டம் ஓர் அருமருந்தாக அமைந்திருப்பதாகத் தெரிவித்திருக்கின்றார் இந்திய உட்துறை அமைச்சர் அமித்ஷா. அண்டை நாடுகளில் துன்பங்களைச் சகித்துக் கொண்ட மக்கள், இந்தியாவுக்குள் தஞ்சமடைந்த பின்னரும் அதே நிலையை எதிர்கொள்வது பெரும் அபத்தம் என்றும் இயம்பியிருக்கின்றார் அவர்.

இந்த வருடம் இடம்பெற்ற இந்திய மக்களவைத் தேர்தலுக்கு முன்பாக, அங்கு பா.ஜ.க. அரசாங்கத்தால், குடியுரிமைத் திருத்தச் சட்டம் புதுப்பிக்கப்பட்டது. இதன்மூலம், கடந்த 75 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு ‘அதாவது சுதந்திர இந்தியா மலர்ந்த பின்னர், இந்தியாவுக்குள் தஞ்சமடையும் ஒருவர் இந்தியக் குடியுரிமையைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புகள் இலகுபடுத்தப்பட்டன. எனவே, அமித்ஷாவின் கூற்றுகளையோ அல்லது பா.ஜ.க. அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட குடியுரிமைத் திருத்தச் சட்டத்தையோ குறைமதிப்பீட்டுக்கு உட்படுத்த இயலாது.

ஆனால், அயல்நாடுகளில் வஞ்சிக்கப்படும் இனங்களுக்கு, மதக்குழுமங்களுக்கு நீதியை வழங்கியிருப்பதாகக் கூறிக்கொள்ளும் அமித்ஷா தரப்பினர், அந்த நீதியை, நியாயத்தின் பாற்பட்டு பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்குமாகத்தான் வழங்கியிருக்கின்றனரா? என்ற கேள்விக்கான பதிலைத் தேடவேண்டியிருக்கின்றது. ஏனெனில், அயல்நாடுகளில் வஞ்சிக்கப்படும் இந்துக்களும், சமணர்களும், பௌத்தர்களும் மற்றும் சீக்கியர்களும்தான் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தின் கீழ், இந்தியக் குடியுரிமையை இலகுவாகப் பெற்றுக்கொள்ள வாய்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மேற்குறிப்பிட்டுள்ள நான்கு பிரிவினருக்கும் அப்பாற்பட்ட இன, மத குழுமங்களுக்கு நீதியென்பது இன்னமும் இந்தியாவில் எட்டாக்கனிதான்.

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர் காரணமாக, பல்லாயிரம் ஈழத்தமிழர்கள் இந்தியாவுக்குள் அகதிகளாகத் தஞ்சமடைந்தனர். ஆனால், முகாம் வாழ்க்கையே இன்றளவும் அவர்களுக்கு முடிவென்றாகியிருக்கின்றது. பரந்துபட்ட திட்டம் ஒன்றின்மூலம் அவர்களுக்குக் குடியுரிமையை வழங்க இன்னமும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அவ்வாறாயின், இலங்கையில் சொல்லொணாத் துன்பத்தைச் சந்தித்த ஈழத்தமிழினம், பல்லாண்டு காலமாக இந்தியாவில் ‘அகதி’ என்ற பெயரில் அல்லாடிக் கொண்டிருக்கின்றதே, இது அமித்ஷாவுக்கு அபத்தமாகப் படவில்லையா?

இந்தியக் குடியுரிமை கிட்டுவதற்கு வழிவகைகள் செய்யப்பட்டுள்ள இந்துக்கள், பௌத்தர்கள், சமணர்கள் மற்றும் சீக்கியர்களை விடவும், ஈழத்தமிழர்கள் குடியுரிமை தொடர்பான கோரிக்கைகளை முன்வைக்க கூடுதல் உரித்துடையவர்கள். ஏனெனில், இலங்கையில் இடம்பெற்ற நீண்டதும் நெடியதுமான போரில் இந்தியாவின் நேரடித்தலையீடு மிகமிக அதிகம். போரின் பின்னரும்கூட தமிழர்களின் நீதியென்பது இங்கு எட்டாக்கனிதான். எனவே, பிராந்திய வல்லரசென்ற வகையிலும், ‘தமிழர்களின் மீட்பராக’ தன்னை அடையாளப்படுத்தும் ஒரு தேசம் என்ற ரீதியிலும், குடியுரிமைத் திருத்தச் சட்டத்தின் மூலம் பா.ஜ.க. அரசாங்கம் எந்த நியாயத்தையும் செய்யவில்லை என்பதே உண்மை.




# பரப்புரை செலவுகளை சமர்ப்பிப்பது கட்டாயம்!

## தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

**கொழும்பு, ஓக.20**

**அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்களும் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட 21 நாள்களுக்குள் தங்கள் தேர்தல் பிரசார செலவுகள் குறித்த முழுமையான அறிக்கையை தேர்தல்கள் ஆணையத்திடம் சமர்ப்பிக்கவேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
பிரசாரச் செலவுகளை வழங்கத் தவறினால் அவர்கள் ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டாலும் பதவியை இழக்கநேரிடும்.
2023ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க தேர்தல் செலவினச் சட்டம் பிரசாரச் செலவினங்களுக்கான சட்ட வரம்புகளை அமைக்கிறது. இந்த வரம்புகளை மீறுவது சட்டவிரோதமானது என்பதுடன் சட்ட நடவடிக்கைக்கு வழிவகுக்கும். தேர்தல் செலவுக் கட்டுப்பாடு சட்டத்தின் கீழ், அனுமதிக்கப்பட்ட தொகையை விட அதிகமாகச் செலவுசெய்ய அனுமதிக்கப்படமாட்டாது. தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட 21 நாள்களுக்குள் வேட்பாளர்கள் தங்களது வருமானம் மற்றும் செலவுகள் குறித்த விரிவான அறிக்கையை சமர்ப்பிக்கவேண்டும். இந்த அறிக்கை 10 நாள்களுக்கு பொதுவெளியில் காட்டப்படும்-என்றார். (எ-இ)

## கடவுச்சீட்டு வழங்கலில் ஏற்பட்டுள்ள சிக்கல்

கொழும்பு, ஓக.20
தற்போது கையிருப்பிலுள்ள கடவுச்சீட்டுகள் 43 நாள்களுக்கே போதுமானவை என குடிவரவு, குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. தினமும் 3 ஆயிரத்து 500 விண்ணப்பங்கள் திணைக்களத்துக்கு கிடைக்கின்றன. அதில் ஆயிரம் கடவுச்சீட்டுகள் மட்டுமே விநியோகிக்கப்படுகின்றன. இவற்றில் நூறு கடவுச்சீட்டுகள் அமைச்சரின் சிபார்சுடன் விநியோகிக்கப் படுகின்றன. (எ-25,6)

## இந்திய சுற்றுலாவிகள் அதிகரிப்பு

கொழும்பு, ஓக.20
இந்தியாவில் இருந்து வரும் சுற்றுலாவிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்துள்ளது என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.
இந்த மாதத்தின் கடந்த இரு வாரங்களில் மட்டும் 16 ஆயிரத்து 383 இந்திய சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர். (எ-இ)

## வர்த்தகர்களை பதிவு செய்ய செயலி

கொழும்பு, ஓக.20
நாட்டில் உள்ள அனைத்து வர்த்தகர்களையும் பதிவு செய்து தரவுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான செயலி ஒன்று தயாரிக்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. கடந்த இரண்டு தசாப்தங்களாக இந்த நடவடிக்கை உரிய முறையில் முன்னெடுக்கப்படவில்லை என்று நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது. (எ-இ)

## எம்.பி.களுக்கு இனி துப்பாக்கி அனுமதி

கொழும்பு, ஓக.20
நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பாதுகாப்புக்கு இரண்டு றிப்பிட்டர் துப்பாக்கிகளையும் ஒரு பிஸ்டலையும் வைத்திருப்பதற்கு நாடாளுமன்றம் அனுமதியளித்துள்ளது. அரகலய போராட்டத்தின் போது இடம்பெற்ற சம்பவங்களையடுத்தே இந்த விடயம் பாதுகாப்பு அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்தத் துப்பாக்கிகளுக்குரிய அனுமதிப்பத்திரம் நாடாளுமன்றத்திடமே இருக்கும். (எ-25,6)

**நாளை**

21.08.2024

புதன்கிழமை - ஆவணி - 05
சுபநேரம் : 04.35 - 06.05
ராகுகாலம் : 12.05 - 01.35

**நாளொரு நல்வார்த்தை**

உங்களை நம்புங்கள் உலகம் உங்கள் காலடியில் இருக்கும். மூடநம்பிக்கைகள் நுழைந்தால் மூளை போய்விடும்.

- விவேகானந்தர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். குடாநாட்டில்

# 12, 900 ஹெக்ரேயரில் இம்முறை பெரும்போகம்

**யாழ்ப்பாணம், ஓக.20**

**யாழ். மாவட்டத்தில் இந்தவருடம் பெரும்போக செய்கை சுமார் 12ஆயிரத்து 900 வரையிலான ஹெக்ரேயர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்படவுள்ளன என்று விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

நெற்செய்கைகளுக்கான கால ஏற்பாடுகள் யாவும் தயார் செய்யப்பட்டு வருகின்றன. இதற்காக விவசாயிகள் தமது வயல்களை உழுது இயற்கைப் பசளைகளைப்போட்டு செய்து வருகின்றனர்.

இம்முறை கிட்டதட்ட சுமார் 12ஆயிரத்து 900 வரையிலான ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கையை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பி.ஜி -406, ஏ-ரி 362 ஆகிய இனங்களைச் சேர்ந்த தரமான முளைதிறன் கூடிய விதை நெல்லை திருநெல்வேலியில் உள்ள விதை அத்தாட்சிப்படுத்தும் நிலையத்தில் விவசாயிகள் பெறுக் கொள்ளமுடியும்.

யாழ். மாவட்டத்தில் இம்முறை கூடுதலான நிலப்பரப்பில் பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்வதற்கான விழிப்புணர்வு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-45-17)


## உற்சவகால அருளுரை!

யாழ்ப்பாணம், ஓக. 20

நல்லைக்கந்தப்பெருமான் மகோற்சவ காலத்தில் நடத்தப்படுகின்ற அருளுரை வழமைபோல் இம்முறையும் சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் சிவகுரு ஆதீனமுதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளால் நடத்தப்பட்டு வருகிறது.

மஞ்சத்திருவிழாவுடன் ஆரம்பமாகியுள்ள அருளுரை நிகழ்வானது தீர்த்தோற்சவம் வரை தினமும் இரவு 8.00 - 8.30 மணி வரை சிவகுரு ஆதீன மண்டபத்தில் நடைபெறும்.

அந்தவகையில் பெருந்திருவிழாவின் 12ஆம் நாளான இன்று செவ்வாய்க்கிழமை 'அலங்காரா நல்லூரா' எனும் தலைப்பில் அருளுரை இடம்பெற உள்ளது. (ஒ-100)



யாழ். மத்திய கல்லூரி மாணவத் தலைவர்களின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் நிகழ்வு கல்லூரியின் கேடபோர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆர்வத்துடன் குருதி வழங்கினர். (ச-25, 66)

## கோட்டக்கல்வி அலுவலர்களை நியமியுங்கள்

முல்லைத்தீவு, ஓக.20

முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட ஒட்டுசுட்டான், மாந்தைகிழக்கு ஆகிய கல்வி கோட்டங்களுக்கு நீண்டகாலமாக கோட்டக் கல்வி அலுவலர்கள் பணியில் இல்லாத நிலைமையால் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுவதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

துணுக்காய் கல்வி கோட்டத்துக்கு மாத்திரம் கோட்டக் கல்வி அலுவலர் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் ஏனைய இரு கோட்டங்களுக்கும் நீண்டகாலமாக அலுவலர் நியமிக்கப்படவில்லை.

மாந்தை கிழக்கில் 14 பாடசாலைகளும் ஒட்டுசுட்டானில் 26 பாடசாலைகளும் உள்ளன.


இந்தப் பாடசாலைகளில் நலன் கருதி கோட்டக்கல்வி அதிகாரிகளை நியமிக்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-25, 13)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்கு '13' தீர்வாக அமையாது!

## சிறிதுங்க ஜயசூரிய தெரிவிப்பு



**கொழும்பு, ஓக.20**

**தேசிய இனப்பிரச்சினைக்கு அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் போதுமான தீர்வாக அமையாது. தமிழ் மக்களுக்கு தம்மைத் தாமே ஆளக்கூடிய சுயநிர்ணய அடிப்படையில் தீர்வு அவசியம் என்று ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணாமல் இலங்கையால் ஓர் அங்குலமேனும் முன்னோக்கிசெல்லமுடியாது. பொருளாதாரப் பிரச்சினை மட்டும் அல்ல, இனப்பிரச்சினையும் பாரதூரமான பிரச்சினையாகும். தேர்தல் நெருங்கும் வேளையில்தான் 13 பற்றிப் பேசப்படுகின்றது. இது நகைச்சுவைத்தனமான செயற்பாடாகும். மாகாண சபை முறைமை நடைமுறையில் உள்ளது. அதன் மூலம் பிரச்சினை தீர்ந்ததா? குறைந்தபட்சம் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களாவது பகிரப்பட்டதா? இல்லை. அவ்வாறு பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்கி இருந்தால்கூட ஓரளவு நம்பிக்கையை வென்றிருக்கலாம். ஜனாதிபதி வேட்பாளர்களில் இனப்பிரச்சினைக்கான தீர்வு எம்மிடம் மட்டுமே உள்ளது. நாம் சுயநிர்ணய உரிமையை ஏற்கின்றோம். 13 தீர்வாக அமையாது. 13 இற்கு அப்பால் சென்று தமது எதிர்காலத்தை தீர்மானிக்கும் உரிமை தமிழர்களுக்கு வழங்கப்படும். ஸ்கொட்லாந்தில் போன்று இங்கு தீர்வு வழங்கப்படும் - என்றார். (எ-44)

# சஜித்தின் வெற்றிக்காக உழைக்கும் கூட்டமைப்பு

*லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு*

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவின் வெற்றிக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார். நாவலப்பிட்டியவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அத்தியாவசியப் பொருள்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வரி எமது ஆட்சியில் நீக்கப்படும். மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்படும். எதிர்க்கட்சியில் இருந்தபடியே அரசாங்கத்தைவிடவும் அதிக சேவைகளை சஜித் பிரேமதாஸ செய்துள்ளார். எனவே, அவரை முழுமையாக நம்பலாம். வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சஜித்தின் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் செயற்படவுள்ளது.

வருகின்ற ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் வெற்றி உறுதியாகியுள்ளது. கண்டிமாவட்டத்தில் நாவலப்பிட்டிய தொகுதியையும் கைப்பற்றுவோம்-என்றார். (எ-44)

# யானைக்கு பதில் சிலிண்டர்

கொழும்பு, ஓக.20

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இதுவரைகாலமும் காட்சிப்படுத்தப்பட்டிருந்த யானை சின்னத்துக்கு பதிலாக தற்போது 'கேஸ் சிலிண்டர்' சின்னம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

கட்சித் தலைமையக அலுவலகத்துக்கு முன்பாக கட்சியின் ஸ்தாபக தலைவர் டி.எஸ். சேனாநாயக்கவின் படம், தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் படத்துடன் இடையில் யானை சின்னமும் காணப்பட்டுவந்தது.

யானை சின்னம் நிலையானதாக இருந்தது. எனினும், தற்போது அந்த இடத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் படமும், கேஸ் சிலிண்டர் சின்னமும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. யானை சின்னம் மறைக்கப்பட்டமை தொடர்பில் ஐ.தே.க. ஆதரவாளர்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது. எனினும், இது தற்காலிக ஏற்பாடு மாத்திரமே என ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (எ-44)

# நிறைவேற்று அதிகார முறையை ஒழிப்போம்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 20

ஜனாதிபதி முறையில் மாற்றங்களைக் கொண்டு வருவோம் என தலைவர்கள் வெட்டிக் கருத்து கூறினாலும் எந்த மாற்றமும் செய்யவில்லை. ஜனாதிபதி முறையில் மாற்றங்களைக் கொண்டு வருவதாக ஆட்சியாளர்கள் தலதா மாளிகையில் எழுதி கையொப்பமிட்டு கொடுத்தும் அந்தக் கதிரைக்குச் சென்றபின் அதனை மறந்து விட்டிருக்கிறார்கள். எனக்குப் பட்டம் பதவிகளில் ஆசைகள் இல்லாத காரணத்தால் அதிகாரத்துக்கு வந்த உடனே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாது செய்து நாடாளுமன்றத்தை மையமாகக்கொண்ட ஜனநாயக ஆட்சிமுறையை உருவாக்குவேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

"நான் அதிகாரத்தை எடுக்கவில்லை என்று பல்வேறு தரப்பினர் கூறிக் கொண்டிருந்தாலும் ராஜபக்சக்கள் உள்ள இடத்தில் நான் இருப்பதில்லை. இந்த நாட்டை அதல பாதாளத்துக்குள் தள்ளிய ராஜபக்சக்களுக்கு பிரதான பாதுகாவலராக இந்த நாட்டின் ஜனாதிபதி இருந்து வருகிறார். ராஜபக்சக்களை பாதுகாக்கின்ற பொலிஸ்மா அதிபராகவும் இருந்து வருகிறார்" என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (ஒ-6)

# புதினம் தெரியுமோ?

**ஊரோடு ஒத்தோடுற மாதிரி ட்ரெண்டிங்கில இருக்கிற விசயங்களையும் பாவிச்சு தங்கட வித்துவத்தைக் காட்டுற சிலர் இருக்கினம். சினிமாப்படங்கள், கதையள், பேஸ்புக் பதிவுகள், மீம்ஸ் எண்டு இப்பிடி நாட்டில என்னென்ன விசயம் பேசுபொருளா இருக்கோ அதைவைச்சு ஒப்பேத்திப்போடுவினம். சனத்துக்கும் அது நல்லாப் பிடிச்சுப் போடும். இப்ப இந்த வித்தையை எக்ஸாம் பேப்பரிலையும் ரீச்சர்மார் காட்ட வெளிக்கிட்டினம்.**

**போனகிழமை பள்ளிக்கூடங்களில ரண்டாம் தவணைச் சோதினை நடந்தது. அதில வடமராட்சி வலயத்தில டாக்குத்தர் அருச்சுனா எண்டு தமிழ்ப்பாடத்தில ஒரு கேள்விக்கு அவரின்ர பேரைப் பாவிச்சிருக்கினம். (ஆனால் அந்தக் கேள்வியே பிழையாப் போட்டிட்டினம் எண்டு இன்னொரு கதை ஓடுது. தமிழ்ப்பாட பேப்பரில 'டாக்டர்' எண்ட சொல்லைப் பாவிச்சது, ஒளிப்பு மறைப்பின்றி எண்ட சொல்லுக்கு விளக்கம் கேக்க நினைச்சு, அதில வாற 'இன்றி' எண்டதை விட்டிட்டு 'ஒளிப்பு மறைப்பு' எண்டு போட்ட தெண்டு கனக்க விமர்சனங்களும் வரத்தான் செய்யுது) அதைமாதிரி குடியியல் எண்ட பாட எக்ஸாம் பேப்பரில 'மக்களுக்குச் சீரான சேவையை வழங்காமையால் அண்மையில் விமர்சனத்துக்கு உள்ளான மருத்துவமனை எது?' எண்டு கேட்டிட்டு கீழ குடுத்த நாலுவிடையில 'சாவகச்சேரி மருத்துவமனை ' எண்டும் போட்டிருந்தவை.**

**இப்ப இந்த ரண்டு விசயமும் 'அரசமருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கு' சரியான கொதியைக் கிளப்பிட்டுது. இப்பிடி எக்ஸாம் பேப்பரில போட்டு எங்கட துறையைக் கேவலப்படுத்தினவைக்கு எதிரா உடனடியாக நடவடிக்கை எடுக்கோணுமெண்டு கல்வித்திணைக்களத்துக்கு கடிதமொண்டும் அனுப்பி இருக்கினம்.**

**ஆனால் வடிவா அந்தக் கேள்வியளை வாசிச்சுப் பார்த்தால், எந்த இடத்திலையும் சுகாதாரத்துறையையோ, டாக்குத்தர்மாரையோ அந்தக் கேள்வியள் கேவலப்படுத்தேலை. கேள்வி அமைப்பிலதான் பிழை இருக்கே தவிர, அர்ச்சுனான்ர பேரைப் போட்டதிலையோ, இல்லாட்டி சாவக்சேரி ஆஸ்பத்திரியின்ர பேரைப் போட்டதிலையோ பிழை இல்லை. முந்தியெல்லாம் இப்பிடி நடைமுறை விசயங்களைப் போட்டு, எக்ஸாம் ரென்சனைக் குறைக்கிறவை. இப்பிடியான கேள்வியளைப் போட்டால், பிள்ளையள் பயமில்லாமல், ஆர்வமா எக்ஸாம் செய்வினம். அதோட அந்த ஆஸ்பத்திரியில சீரான சேவை குடுபடேலை எண்டதை அர்ச்சுனா மட்டும் சொல்லேலை, எல்லா டாக்குத்தர்மாரும், அங்கத்தை சனங்களும் தான் சொன்னவை. அதை ஏற்றுக்கொண்டுதான் , இனி அதையெல்லாம் மாத்தி நல்லபடியா சேவை வழங்கப்போறம் எண்டு புதிசா அந்த ஆஸ்பத்திரிக்கு பொறுப்பதிகாரியா நியமிக்கப்பட்ட டாக்குத்தர் ரஜீவும் சொன்னவர். சொன்னமாதிரியே அவர் இப்ப சனங்கள் குறை சொல்லாதபடி ஆஸ்பத்திரியை நடத்துறார். அர்ச்சுனான்ர பேரும், சாவகச்சேரி ஆஸ்பத்திரியில சீரான சேவையை முந்தி வழங்கேலை எண்டதும் எந்தவகையில, ஆரைக் கேவலப்படுத்துது எண்டு உண்மையா விளங்கேலை.**

**எங்கட பிள்ளையள் இப்ப பாடப்புத்தகத்தைக் கையில தொடுறதை விடவும், போனை நோண்டுறதுதான் கூட. அதால பிள்ளையளுக்கு எக்ஸாம் பேப்பரில போட்டதாலதான் தங்கட மானம் போட்டுதெண்டு அரச மருத்துவ அதிகாரியள் சங்கம் புலம்பிறது சின்னப் பிள்ளைத்தனம். உதுக்குப் புலம்பிறதை விட்டிட்டு அவையள் சிந்துஜான்ர சாவுக்கு நீதிகேட்டு ஏதும் செய்தால் பிரியோசனமா இருக்கும் கண்டியளோ.**

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதர வகையில் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும். தாய்வழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். பொறுமையைக் கடைப் பிடிக்கவும்.

**இடபம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்கு வாதம் செய்வதைத் தவிர்க்கவும். உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படும்.

**மிதுனம்:** விழிப்புடன் செயற்பட வேண்டிய நாள். குடும்பத்தில் சிறு பிரச்சினைகள் தோன்றும். மனம் குழப்பம் அடையும். பணிபுரியும் இடத்தில் சில சங்கடங்கள் உண்டாகும். வேலைபளு அதிகரிக்கும்.

**கடகம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். முக்கிய பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் ஆதாயமும் கிடைக்கும்.

**சிம்மம்:** சிந்தித்துச் செயல்படவேண்டிய நாள். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். வாழ்க்கைத் துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

**துலாம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம் :** இன்று பொறுமையுடன் செயல்படவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளுக்காக பாடுபட வேண்டி இருக்கும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயல்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிற்பகலுக்குமேல் பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அவர்கள் கேட்டதை வாங்கித் தருவீர்கள்.

**மகரம்:** பலவகைகளிலும் அனுகூலமான நாள். வாழ்க்கைத்துணை நீண்டநாள்களாக கேட்டுக்கொண்டிருந்ததை வாங்கித் தருவீர்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**கும்பம்:** புதிய முயற்சிளைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது நல்லது. வாழ்க்கைத் துணையின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள். வாழ்க்கைத் துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். மாலையில் பிள்ளைகள் மூலம் மகிழ்ச்சி தரும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் மேலோங்கும். முக்கிய முடிவு எடுக்க உகந்த நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணைவழி உறவினர்கள் தொடர்பு கொண்டு பேசுவது மகிழ்ச்சியும் உற்சாகமும் தருவதாக இருக்கும்.

## பாத யாத்திரை

வவுனியா வேப்பங்குளம் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி, முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இருந்து,11 ஆவது வருட யாழ்.நல்லூர் கந்தன் ஆலயம் நோக்கிய வேல் தாங்கிய பாத யாத்திரை எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 31 ஆம் திகதி சனிக்கிழமை வரையாக 7 தினங்கள் ஏ-9 பிரதான வீதி வழியாக அருகாமையில் உள்ள ஆலயங்களை தரிசித்தவாறு நல்லூர் கந்தன் ஆலயத்தை அடையவுள்ளது.

பக்தர்களை யாத்திரையில் இணைந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (எ-25)

## வெள்ளப் பெருக்கால் போக்குவரத்துத் தடை!

கொழும்பு, ஓக.20

கொழும்பு - புத்தளம் வீதியில் மஹவெவ நகருக்கு அருகில் வெள்ளம் சூழ்ந்துள்ளதால் நேற்றுப் போக்குவரத்து தடை ஏற்பட்டுள்ளது. மஹாவெவ தனிவெல்ல தேவாலயத்திலிருந்து மஹாவெவ நகரம் வரையிலான பகுதிகளில் நீர் நிரம்பிக் காணப்படுகின்றது. சில பகுதிகளில் மூன்று அடிக்கு மேல் நீர் தேங்கியிருப்பதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குளியாபிட்டிய பிரதேசத்தில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக மஹாவெவ லுனு ஓயா மற்றும் ஹெமில்டன் கால்வாயில் நீர் நிரம்பி வழிவதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## கொன்ஸ்டபிள் கொலை மூவர் கைது

கொழும்பு, ஓக.20

தங்காலை - கதுருபொகுன பகுதியில் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவரை பொல்லால் தாக்கி கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் உட்பட மூன்று பேர் தங்காலை பொலிஸ் குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரதான சந்தேக நபர் கண்டி பிரதேசத்தில் வைத்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபரிடமிருந்து ரி-56 ரக துப்பாக்கி, 12 தோட்டாக்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. பிரதான சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், தங்காலை பிரதேசத்தில் உள்ள பாழடைந்த வீடொன்றில் தலைமறைவாக இருந்த ஏனைய இரண்டு சந்தேக நபர்களும் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (எ-இ)

## யுக்திய நடவடிக்கையில் 673 பேர் நேற்றுக் கைது!

நாடளாவிய ரீதியில் நேற்று அதிகாலையுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலயத்துக்குள் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின் போது போதைப்பொருள் குற்றம் தொடர்பில் 673 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 663 ஆண்களும் 10 பெண்களும் அடங்குகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் 21 பேர் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், 2 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-இ)



## வாய்க்கால்கள் சேதம் சிறுபோகம் பாதிப்பு!

*அக்கராயன் விவசாயிகள் திண்டாட்டம்*

கிளிநொச்சி , ஓக.20

கிளிநொச்சி அக்கராயன் குளத்தின் நீர்ப்பாசன வாய்க்கால்கள் சேதமடைந்துள்ளதால் சிறுபோக அறுவடை பாதிப்படைந்துள்ளது என்று விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

2010 ஆம் ஆண்டில் ஜப்பான் அரசாங்கத்தின் 350 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் அக்கராயன் குளத்தின் அணைக்கட்டு, வான் பகுதிகள் புனரமைக்கப்பட்டன. ஆனால் குளத்தையும், வாய்க்கால்களையும் முழுமையாக புனரமைப்பதற்கு ஆயிரம் மில்லியன் ரூபா நிதி தேவைப்படுவதாக அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 14 ஆண்டுகளில் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு கிடைக்கப் பெற்ற நிதியில்சிறியவேலைகள்முன்னெடுக்கப்பட்டன. இருப்பினும் வீதிகளும் வாய்க்களும் சேதமடைந்தே உள்ளன. இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்திய போதிலும் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்படவில்லை என விவசாயிகள் மேலும் சுட்டிக் காட்டுகின்றனர். (எ-25-13)

## ரயிலுடன் மோதி ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக.20

விறகு ஏற்றிச் சென்ற லொறி, ரயிலுடன் மோதியதில் அதில் பயணித்த இருவரில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றொருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று கொஸ்கொட பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம், கொஸ்கொட இடுருவா பகுதியில் உள்ள ரயில் கடவையில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றுள்ளது. 55 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளார் என்றும், அவரும் பலத்த காயமடைந்த நபரும் இடுருவா, மஹா இதுருவா பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (எ-இ)

## ஹோட்டல் வாயிலில் சிக்கியது தோட்டா!


கொழும்பு, ஓக.20

கொழும்பில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றின் நுழைவாயிலுக்கு அருகில் உயிருள்ள தோட்டா ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று கொழும்பு, கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர். 9 மி.மீ ரக துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் தோட்டா ஒன்றே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஹோட்டல் வளாகத்தை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர் ஒருவர் நுழைவாயிலுக்கு அருகில் உள்ள அரலிய மரத்துக் அருகில் உள்ள சுவரின் அடிபகுதியை சுத்தம் செய்து கொண்டிருந்தபோதே இந்த தோட்டா சிக்கியுள்ளது.

பிரமுகர்கள் ஹோட்டலில் வந்து தங்கியிருந்த நிலையில், பாதுகாப்பு அதிகாரிகள் இருந்த இடத்திலேயே இந்த தோட்டா கிடந்துள்ளது என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது என பொலிஸ் உயர் அதிகாரி தெரிவித்தார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
05 . 05 . 1942

மறைவு
19 . 08 . 2024

## அமரர் சண்முகநாதன் சிதம்பரநாதன்

சித்தன்கேணியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சண்முகநாதன் சிதம்பரநாதன் அவர்கள் 19.08.2024 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விமலாதேவியின் அன்புக்கணவரும், குமரன், அகிலா (கட்டடங்கள் திணைக்களம் மத்தி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சயந்தன் (மின் அத்தியட்சகர், CEB வட்டுக்கோட்டை) அவர்களின் பாசமிகு மாமனாரும் மங்களேஸ்வரி அமரர்களான சரவணபவானந்தன், நடேசு, இராஜேஸ்வரி மற்றும் தனலட்சுமி ஆகியோரின் அன்பு சகோதரனும் காலஞ்சென்ற மகேஸ்வரன், சுந்தரலிங்கம் மற்றும் ஈஸ்வரி, பரமசிவம், தயாளதேவி, சந்திரிக்கா, சாந்தலிங்கம், ஞானகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று 20.08.2024 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குமரன் (மகன்) 0774369809
அகிலா (மகள்) 0774911753

(CR 42950) V-1

# இயல்புக்குள் பங்களாதேஷ்

டாக்கா, ஓக. 20

கலவரங்கள் காரணமாக, பங்களாதேஷில் மூடப்பட்ட பாடசாலைகள் மற்றும் கல்லூரிகளை அடுத்த வாரத்துக்கு முன்னர் முற்றுமுழுதாகத் திறக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது சில கல்லூரிகள் இயல்புக்குத் திரும்பியுள்ளன. (ம)

# பெயர்மாற்றம்


இல.678, 7 ஆம் யூனிற் ச ்மடுநகர், கிளிநொச்சியைச் சேர்ந்த தேசிய அடையாள ட்டை இல.925193704V கொண்ட **மகாதேவன் சுர ல் Fபாதிமா** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **காதேவன் மணிமலர்** என மாற்றிக்கொண்டுள்ளேன். னவே இனிவரும் சகல ஆவணங்களிலும் **மகாதே வன் மணிமலர்** என்றே பயன்படுத்தி கையொப்பமிடுே ன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு தெ ரியப்படுத்துகின்றேன்.

**மகாதேவன் மணிமலர்**

(28291) (N-1)

# மரண அறிவித்தல்

## வேலாயுதம் பாலசிங்கம்



தோற்றம்
09.02.1947

மறைவு
19.08.2024

ஈச்சமோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் பாலசிங்கம் அவர்கள் நேற்று (19.08.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

42, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்

தகவல் குடும்பத்தினர்
076 297 8905

(CR 42687) V-1

# மரண அறிவித்தல்



தோற்றம்
06 . 11 . 1953

மறைவு
15 . 08 . 2024

## இராஜரட்ணம் இராஜேஸ்வரன்

(ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் வடக்கு மாகாணம்)

விளையாட்டரங்க வீதி, கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராஜரட்ணம் இராஜேஸ்வரன் (ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்), கடந்த 15.08.2024 வியாழக்கிழமை இரவு 11.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம் - இராசம்மா தம்பதியரின் செல்வப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரி (ஓய்வுநிலை ஆசிரியர்) அவர்களின் பாசமிகு கணவரும், திவாகரன் (போலந்து), திருமகள் (கனடா), திருக்குமரன் (போலந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தீபா (டென்மார்க்), அகிலேஸ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், இராசநாயகி, இராசலக்சுமி, இராஜலிங்கம், இராஜதுரை ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர் களான சுப்பிரமணியம், சபாநாயகம் மற்றும் கிரிஜா, ஜெகதீஸ்வரி, காலஞ்சென்ற தர்மரட்ணம் மற்றும் கனகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரஜீத், சஞ்ஜெய், கவின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (22.08.2024 வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
விளையாட்டரங்க வீதி,
கல்வியங்காடு.
மனைவி, பிள்ளைகள்.
077 174 7518, 077 433 9426

(cs.55974) (N-1)

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு
1948 . 11 . 28

இறப்பு
2024 . 08 . 18

காரைநகர் புதுறோட் மல்லிகையை பிறப்பிடமாகவும், நீர்கொழும்பு கொச்சிக்கடையை வாழ்விடமாகவும் கொண்ட

## அமரர் நவரத்தினம் தர்மராசா (MGR)

சிதம்பராமூர்த்தி கேணியடி சனசமூக நிலையத்தின் வெற்றிநாதன் அரங்கம் அமைப்பதற்கு உறுதுணையாக இருந்தவர், வருடா வருடம் சிதம்பராமூர்த்தி கேணியடி உறியடி நிகழ்வை தலைமை தாங்கி நடாத்துபவர், தமிழ் தேசியப்பற்றாளர், உலகின் முன்னணி தவில், நாதஸ்வர சக்கரவர்த்திகளை ஆலயங்களுக்கு அழைப்பித்து சிறப்பிப்பவர், காரை விளையாட்டுக்கழக தலைவர்.

**பிறப்பு என்பது இயற்கையின் நியதி இறப்பு என்ன விதிவிலக்கா?**
**இருந்தும் இத்தனை விரைவில் வருவது இறைவன் செய்த சதிக்கணக்கா?**
**பிரிவினைத் தாங்கும் வரங்களைத் தானே இறைவனை**
**தினம் தினம் வேண்டி வந்தோம் அவ் வரத்தினை**
**தந்திட மறுத்த இறைவன் உங்கள் உயிரினை மீட்டுத் தருவானா?**

**அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய ஈழத்துச் சிதம்பர ஆண்டிக்கேணி ஐயனாரை பிரார்த்திக்கின்றோம்.**

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**சிதம்பரா மூர்த்தி கேணியடி சன சமூக நிலையமும்,**
**லண்டன் வாழ் காரைநகர் புதுறோட் நண்பர்களும்**

(cs.55971)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளி. முருகானந்தா கல்லூரியின் உதைபந்தாட்ட அணிகளுக்கான சீருடை அறிமுக நிகழ்வு கல்லூரியின் பழைய மாணவர்களின் ஒழுங்கு படுத்தலில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. புலம்பெயர்ந்து வாழும் கல்லூரியின் பழைய மாணவன் ம. முகுந்தனின் நிதிப்பங்களிப்பில் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன. (எ-25-13)

# தீர்மானங்கள் கிடப்பில் அதிகரிக்கும் குற்றங்கள்

## துணுக்காய் பிரதேச மக்கள் ஆதங்கம்

முல்லைத்தீவு, ஓக.20

முல்லைத்தீவு - துணுக்காய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப் படாததன் காரணமாக ஐயன்கன்குளம், பழையமுறிகண்டி, புத்துவெட்டுவான் ஆகிய பகுதிகளில் சட்டவிரோதச் செயல்கள் அதிகரித்து வருகின்றன என்று அந்தப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். துணுக்காய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தடைவிதிக்கப்பட்டுள்ளபோதும் குறித்த பகுதிகளிலிருந்து டிப்பர்களில் மரம், மணல் போன்றன வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. தடையை கண்காணிப்பதற்கு ஐயன்கன்குளம் பொலிஸார் பொறுப்பாக நியமிக்கப்பட்டனர். ஆனால் தற்போதும் மணல் அகழ்வு தொடர்கிறது. மணல் அகழ்வைத் தடுப்பதற்கு கொக்காவில் பகுதியில் பொலிஸ் இராணுவம் இணைந்த காவல் அரண் அமைக்கப்படும் என அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டபோதிலும் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படாமலேயே உள்ளது என்றும் அந்தப்பிரதேச மக்கள் சுட்டிக்காட்டினர். (ச-25.13)

# தெல்லிப்பழை துர்க்காதேவி அடுத்தமாதம் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 20

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா அடுத்தமாதம்4 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல்10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்தும் பன்னிரண்டு மஹோற்சவப் பெருவிழாவில் அடுத்தமாதம்09 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு திருமஞ்சத் திருவிழாவும், 12 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப.ஒரு மணிக்கு வேட்டைத் திருவிழாவும், அன்றையதினம் மாலை 5 மணிக்கு கைலாசவாகனத் திருவிழாவும், 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை4 மணியளவில் சப்பரத்திருவிழாவும், 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் தேர்த் திருவிழாவும், மறுநாள் காலை09.30 மணியளவில் துர்க்கா புஷ்கரணித் தீர்த்தக் கேணியில் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ச-66)

# புதிய குடியகல்வு அலுவலகம் வவுனியாவில் திறந்து வைப்பு!




வவுனியா, ஓக.20

வவுனியா குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் புதிதாகத் திறந்து வைக்கப் பட்டுள்ளது. வவுனியா மாவட்டச் செயலர் பி.ஏ. சரத் சந்திர தலைமையில் வவுனியா – மன்னார் வீதியில் இந்தப் புதிய அலுவலகம் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. சுமார் 24 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்பட்ட குறித்த கட்டடமானது குடியகல்வு, குடிவரவு திணைக்களத்தின் புதிய அலுவலகமாக இன்று முதல் செயற்படவுள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது. (ரி- 110,18)


# "அரசியல் நூல்" வெளியீடு இன்று

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல்துறை அரசறிவியல் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஐ.வி.மகாசேனன் எழுதிய 'இலங்கை ஜனாதிபதித் தேர்தல்களில் ஈழத்தமிழர் அரசியல்' எனும் நூலின் வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடக் கருத்தரங்கு மண்டபத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல்துறைத் தலைவர் கே.ரி. கணேசலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ஒ-66)



செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் சப்பரத உற்சவத்தை முன்னிட்டு குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்தும் தூக்கு காவடிகள் எடுத்து பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்தினர். (எ-ரி-100)




# ஓய்வூதிய நிதிசேகரிப்பு யாழில் விருது

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் ஓய்வூதிய பணம் சேகரிப்புத் திட்டத்தில் அகில இலங்கை ரீதியாக யாழ். மாவட்டம் முதலிடம் பெற்றுக் கொண்டது. அதற்கான விருதை யாழ். பதில் மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் பெற்றுக்கொண்டார்.

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் விருது வழங்கும் நிகழ்வு வடக்கு - கிழக்கு சிரேஷ்ட இணைப்பாளர் பா. பிரதீபன் தலைமையில் வவுனியா நோர்வே ஹொட்டலில் கடந்த வியாழக் கிழமை நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் தலைவர். பி. எஸ். எஸ். டிக்வெலா, சிறப்பு விருந்தினராக சபையின் பொது முகாமையாளர் கே. ஏ. எஸ். பி. கஹநாகிர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-ரி-9,66)

# மரண அறிவித்தல்



தோற்றம்
08 . 08 . 1940

மறைவு
19 . 08 . 2024

## அமரர் நமசிவாயம் புனிதவதி

திருமதி புனிதவதி காலமானார். அன்னார் காலஞ்சென்ற தியாகராசா, தையல்நாயகி ஆகியோரின் புதல்வியும், காலஞ்சென்ற பத்மாவதி, வேலாயுதபிள்ளை, திருஞானவதி, செல்வநாயகி, சிவகுமார், காலஞ்சென்ற காலாவதி, மக்களம்மா, ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற நமசிவாயம் (அம்பிகா மருந்தகம்) மனைவியும், இரவிகுமார் (ஓய்வு பெற்ற ஆசிரியர் (இந்துக் கல்லூரி யாழ்ப்பாணம், சாவகச்சேரி) சிவபாலன், சிவகௌரி, குருபரன் ஆகியோரின் தாயாரும், சந்திரமோகன் (அம்பிகா மருந்தகம் இணுவில்) சத்தியவதி (ஓய்வு நிலை ஆசிரியை), பாலகி, அருந்ததி (ஆசிரியை) ஆகியோரின் மாமியாரும், பைரவி, அருண், மாறன், சாம்பவி, சங்கவி, கணாதீபன், பிறையொளி, தாரகி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் 19.08.2024 இல் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

சரசாலை வடக்கு
சாவகச்சேரி

தகவல்:
ந. சிவபாலன் (அம்பிகா மருந்தகம்)

(CS 4251) M-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆட்சியைப்...

நாம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எங்களிடம் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைக்க அவர்கள் தயாராக இருக்கவில்லை என்பதே உண்மை என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பரப்புரைக் கூட்டமொன்றில், ராஜபக்ச தப்பியோடிய வேளையில் பொறுப்பை ஏற்குமாறு எங்களுக்கு அழைப்பு விடுத்தபோது, நாங்கள் ஓடி ஒளிந்தோமெனக் கூறியிருக்கின்றார். ரணில் விக்கிரமசிங்க அவர்களே! நீங்கள் ஒரு ஜனாதிபதி. ரணிலின் அளவுக்கு அதைக்கூறினால் பரவாயில்லை. ஆனால் ஜனாதிபதிபதவிக்கு அவ்வாறானவிடயங்களைக் கூறுவது பொருத்தமற்றது.

கோத்தபாயவோ, மஹிந்த ராஜபக்சவோ பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு தேசிய மக்கள் சக்திக்கு ஒருபோதும் அழைப்பு விடுக்கமாட்டார்கள். எங்களுக்கு அழைப்பு விடுக்கப்படவுமில்லை. அதற்காக நாங்கள் ஆச்சரியப்படவில்லை. ராஜபக்சக்கள் ஒரு தாம்பாளத்தில் வைத்து அதிகாரத்தை எங்களிடம் ஒப்படைப்பார்கள் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? அப்படி ஒப்படைக்கமாட்டார்கள். 2022 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதி ஜனாதிபதி கோத்தபாயவுக்கு கடிதத்தை எழுதினோம். இந்த நெருக்கடியைத் தீர்த்து வைக்க தேசிய மக்கள் சக்தி தயார். எங்களுக்கு அதிகாரத்தைத் தாருங்கள் என்று கேட்டோம். குறைந்த பட்சம் அந்தக் கடிதம் கிடைத்தது என்று கூட எங்களுக்கு பதில்தரவில்லை.

அடுத்ததாக நாடாளுமன்றத்தில் நான் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் ஜனாதிபதிப் பதவிக்காகப் போட்டியிட்டேன். எங்களுக்கு வாக்களித்திருக்கலாமே. அன்று நாடாளுமன்றத்தில் நாங்கள் மூன்று பேர் மாத்திரமே இருந்தோம். எங்களுக்குச்சார்பாக நாடாளுமன்றத்தில் எவருமே வாக்களிக்கவில்லை. அதற்கான காரணம் என்ன? அவர்கள் ஒருபோதுமே எங்களுக்கு அப்படி அதிகாரத்தைக் கொடுக்கமாட்டார்கள்.

தேசிய மக்கள் சக்திக்கு அதிகாரத்தைப் பெற்றுக்கொடுப்பதென்பது ஊழலுக்கும் மோசடிக்குமான முற்றுப்புள்ளியென அவர்களுக்குத் தெரியும். அவர்களுக்குத் தண்டனை வழங்குவதை நாங்கள் பிரதான நோக்கமாகக் கொண்டிருக்கின்றோம் என்று அவர்கள் அறிவார்கள். ஆதலால், அவ்வளவு இலகுவில் அதிகாரத்தைத் தரமாட்டார்கள்.

எனவே ரணில் விக்கிரமசிங்கவும் அவருடைய கையாட்களும் தொடர்ச்சியாக நாங்கள் தப்பியோடினோமென கூறிவருகிறார்கள். ஆனால் நாங்கள் அப்படித் தப்பியோடியவர்களல்லர். தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த நாங்கள் ஒருபோதுமே பயந்து ஓடுபவர்களல்ல. இந்தச் சவாலை நாங்கள் ஏற்றுக்கொள்வதும் பயந்தோடுவதற்காக அல்ல.

சீரழிந்துள்ள நாட்டை, பொருளாதாரம் சீரழிந்துள்ள விதத்தை, குற்றச் செயல்கள் மலிந்துள்ள விதத்தை, கடனை மீளச்செலுத்த முடியாதுள்ள விதத்தைக் கண்டு நாங்கள் தப்பியோடத்தான் வேண்டும். ஆனால் நாங்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தயார். ரணில் விக்கிரமசிங்கவுக்கு நான் கூற விரும்புவது நீங்கள் ரணிலாக நடந்து கொள்வதில் தவறில்லை. ஆனால் ஜனாதிபதி பதவியின் அந்தஸ்தை விளங்கிக்கொண்டு நடக்கவேண்டும்" - என்றார். (அ-ஓ-இ)

## ஆறு...

ஜனாதிபதி வேட்பாளர்கள், தமக்கிடையே நேரடி விவாதத்தில் ஈடுபடும் உச்சபட்ச ஜனநாயகத் தன்மையிலான பரப்புரைகள் இதுவரை அமெரிக்காவிலேயே நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. பவ்ரல் அமைப்பின் முயற்சி வெற்றிபெறும் பட்சத்தில், பிரதான வேட்பாளர்கள் தமக்குள் நேரடி விவாதத்தில் ஈடுபட்ட நடைமுறையைப் பின்பற்றிய அரிதான நாடுகளின் பட்டியலில் இலங்கையும் இடம்பெறும். ஜனாதிபதித் தேர்தலில் ஆறு வேட்பாளர்களிடையே நேரடி விவாதத்தை நிகழ்த்திய முதல் ஆசிய நாடாகவும் இலங்கை மாறும்.

இதுதொடர்பில் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்ததாவது:-

"ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஆறு பிரதான வேட்பாளர்களிடையே நேரடி விவாதத்தை நடத்துவதற்கு முழுமூச்சான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி இந்த விவாதத்தை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அநுரகுமார திஸாநாயக்க, சஜித் பிரேமதாஸ, நாமல் ராஜபக்ச, திலித் ஜெயவீர மற்றும் தமிழ்ப் பொதுவேட்பாளர் அரியநேந்திரன் ஆகியோர் விவாதத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இந்த விவாதம் பெரும்பாலான இணையங்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் என்பவற்றில் ஒளிபரப்பத் திட்டமிடப்பட்டுள்ளது" - என்றார். (அ-ம-சி)

## காணாமல்...

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விசாரணையில் பங்கேற்றிருந்த நாகராசா வர்ணகுலசிங்கம் என்ற மேற்படி நபர் ஊடகங்களிடம் தெரிவித்ததாவது:-

"இறுதி யுத்தம் இடம்பெற்றபோது 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் திகதி எனது மகள் யுத்த பிரதேசத்தில் காணாமல் போயிருந்தார். இது தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையம் உட்பட பல்வேறு இடங்களிலும் பல தரப்புகளிடமும் தேவையான ஆவணங்களுடன் முறைப்பாடுகள் பதிவு செய்துள்ளோம். எல்லா இடங்களிலும் ஆவணங்கள் வாங்கப்பட்டதுடன் விசாரணைகள் என்ற போர்வையில் அலைக்கழிக்கப்பட்டுள்ளோம்.

யுத்தம் முடிந்து 15 ஆண்டுகள் முடிந்த நிலையில் விசாரணைகள் தொடர்ந்த வண்ணமே இருக்கிறதே தவிர எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இவ்வாறான நிலையில் திரும்பவும் சாட்சியங்களைக் கேட்டார்கள். அவ்வாறு கேட்ட அதிகாரியிடம், "நீங்கள் 'சாட்சி யார்?' எனக் கேட்கிறீர்கள். யுத்தம் நடைபெற்றபோது அங்க இருந்த படைத்தளபதி யாரோ அவர்தான் காணாமல் ஆக்கப்பட்ட எங்கட பிள்ளைகளுக்கு சாட்சி. அவர்தான் பதில் சொல்லவேண்டும். அப்படி இல்லாவிடில் பாதுகாப்பு அமைச்சரோ இராணுவத் தளபதியோதான் பதில் தரவேண்டும். இந்த மூவரையும் வைத்துக்கொண்டு விசாரணை நடத்தும் பட்சத்தில் நாம் பதிலைத் தருகின்றோம்" என்று தெரிவித்துள்ளேன். யாரைக் கேட்கவேண்டும்? அவர்களை விட்டு சாட்சியங்களை கொண்டுவா என றும் எப்படி காணாமல் ஆக்கப்பட்டனர்? எனவும் எங்களைக் கேட்கின்றனர்.

எங்களின் பிள்ளைகள் காணாமல் ஆக்கப்பட்டதற்கு இறுதி யுத்தத்தைத் தலைமைதாங்கிய படைத்தளபதியும் இராணுவத்தளபதியும் பாதுகாப்பு அமைச்சரும் தான் சாட்சி. அவர்கள் மூவரும் தான் பதில் சொல்லியாக வேண்டும். ஒவ்வொரு போகத்துக்கும் ஆட்சி மாறிவருகின்றது. இதுக்கெல்லாம் காரணமானவர்கள் ஆட்சியை விட்டிட்டு ஓடிவிட்டனர். இன்று அந்தக் குடும்பத்திலிருந்து ஒருவர் தேர்தலில் போட்டியிடுகின்றார். எங்களுக்கான தீர்வை எந்த ஒரு அரசாங்கமும் வழங்கப்போவதில்லை" - என்றார். (அ-ம-100)

## மனிதப்...

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் உள்ளிட்ட, இலங்கையில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழிகளுக்கு நீதிகோரியும், அவை தொடர்பான உண்மைகள் வெளிப்படுத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தியும் இன்று போராட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

முல்லைத்தீவு - வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள இந்தப் போராட்டம், கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிக்கு அருகாக இடம்பெறவுள்ளது.

கொக்குத்தொடுவாயிலும், இலங்கையின் இதர பகுதிகளிலும் இதுவரை பல்வேறு புதைகுழிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில், எதிலும், அது தொடர்பான முழுமையான விசாரணைகள் இடம்பெற்று, உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டு நீதி நிலைநாட்டப்படவில்லை. இவ்வாறானதொரு பின்னணியிலேயே, இன்றைய போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

## நாமலின்...

செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கை ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரை நடவடிக்கைகள் தற்போது தீவிரம் பெற்றுள்ளன. களனியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே மஹிந்த ராஜபக்ச இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஜனாதிபதித் தேர்தல் என்பது சவால் மிக்கது. அனைத்துத் தரப்பினரும் வெற்றிபெறவே முயற்சிப்பார்கள். ஆகவே இந்தத் தேர்தல் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்சவுக்குச் சவாலானது. எம்மை விட்டு விலகிச் சென்றவர்கள் தொடர்பில் பேசிப் பயனில்லை. செல்பவர்களைப் பலவந்தமாகத் தக்கவைத்துக் கொள்ளமுடியாது. பலவந்தமாக வெளியேற்றவும் முடியாது. இருப்பவர்களைக் கொண்டே முன்னோக்கிச் செல்லவேண்டும். அதைத்தான் செய்துகொண்டிருக்கின்றோம்.

நாமல் ராஜபக்சவின் வெற்றிக்காக நாடு முழுவதும் தேர்தல் பரப்புரைகளில் ஈடுபடுவேன். எம் மீதான மக்களின் நம்பிக்கை இன்றும் உறுதியாக உள்ளது. நிச்சயம் நாங்கள் வெற்றிபெறுவோம். தேர்தல் காலத்தில் எம்மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் அனைத்தும் தேர்தல்கால பிரசாரமாகவே காணப்படுகிறது. இதை மக்கள் அறிவார்கள். எனவே, சேறு பூசுவதை விடுத்து கொள்கையை முன்னிலைப்படுத்தி செயற்படுமாறு இதரகட்சிகளிடம் கோரிக்கை விடுக்கின்றேன்" - என்றார். (அ-ம)

## மக்களின்...

நாவலப்பிட்டியவில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாட்டில் இதுவரை முன்னெடுக்கப்பட்டுள்ள கருத்துக் கணிப்புகளின் அடிப்படையில், தேர்தலில் மக்கள் ஐக்கிய மக்கள் சக்தியை வெற்றியடைய செய்யத் தீர்மானித்து விட்டதாகத் தெரியவந்துள்ளது. அந்த வெற்றி எமது வெற்றி அல்ல. அது மக்களின் வெற்றியாகும். நாட்டின் பொருளாதாரம் சீரழிந்துள்ள இந்த சந்தர்ப்பத்தில் மீண்டும் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நிலையை எமது அரசாங்கத்தில் ஏற்படுத்துவோம்.

தனவந்தர்களுக்காக மாத்திரம் செயற்படுத்தப்படும் பொருளாதார வேலைத் திட்டங்களை நாம் இல்லாமலாக்குவோம். நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டைச் செயற்படுவதற்காக அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என்று கூறுகின்றனர். அர்ப்பணிப்பு கீழ்மட்ட மக்களிமிருந்து ஆரம்பிக்கக் கூடாது. நாட்டின் தலைவர் மற்றும் தனவந்தர்களிடமிருந்து அர்ப்பணிப்புகள் ஆரம்பிக்கப்படவேண்டும். அவர்களே அதிகப்படியான அர்ப்பணிப்புகளையும் செய்ய வேண்டும்.

பொருளாதார நலன்கள் சிறிய மக்களையும் சென்றடைய கூடிய யுகத்தை நாம் உருவாக்குவோம். நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டுக்கமைய பொருளாதார வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதாக இடைக்கால ஜனாதிபதி கூறுகின்றார். அது பொய்யாகும். அனைத்து வேலைத் திட்டங்களையும் முன்னெடுப்பது அரசாங்கமே. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதாரக் கொள்கைகளால் நாட்டில் உள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். வறுமையை முற்றாக ஒழிக்கக்கூடிய வேலைத்திட்டங்களை நாம் நடைமுறைப்படுத்துவோம். பொய்களைக் கூறி மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றனர். காலாவதியான மருந்துகளை இறக்குமதி செய்த அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டபோது இந்த ஜனாதிபதியும் அவருடைய அமைச்சர்களுமே அவரைப் பாதுகாத்தனர். ஆனால் சட்டம் அவரைத் தண்டித்துள்ளது" - என்றார். (அ-ம)

## மூன்று...

யுவதிகள் நேற்று திங்கட்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளனர்

யாழ். மாவட்டச் செயலகத்துக்கு சற்றுத் தொலைவில் உள்ள தனியார் விடுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் ஆள் நடமாட்டம் உள்ளதாக யாழ்ப்பாணப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் விடுதிக்குச் சென்று பொலிஸார் சோதனையிட்டனர். இதன்போதே, விடுதியில் எவ்வித பதிவுகளும் இன்றி தங்கியிருந்ததுடன், தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த தவறிய மூன்று யுவதிகளை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட யுவதிகளை விசாரணைகளின் பின்னர் யாழ். நீதிவான் முன்னிலையில் முற்படுத்தியவேளை, அவர்களை எதிர்வரும் 26 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான், மூவரையும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் பணித்துள்ளார். (அ-ஓ-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இதுவரை...

தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
இதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 346 முறைப்பாடுகளும், மாவட்டத் தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 261 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. அத்துடன் தேர்தல் வன்முறைகள் தொடர்பிலும் முறையிடப்பட்டுள்ளன.
(அ-ம)

### ரூ.186...

அறிவித்துள்ளது. வாக்களார் ஒருவருக்கு 109 ரூபாவை தேர்தல் பரப்புரையின் போது வேட்பாளர்கள் செலவிட முடியும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு நாடு முழுவதும் 171 இலட்சத்து 40 ஆயிரத்து 280 வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர். இதற்கு அமைவாக ஒரு வேட்பாளரால் 186.829 கோடி ரூபா வரையில் செல விடமுடியும்.
(அ-ஒ-5)

# உக்ரைனிடம் வீழ்ந்த ரஷ்ய பிரதேசங்கள்

ரஷ்யாவின் சில பகுதிகளை உக்ரைன் படைகள் சுமார் பதினைந்து நாள்களாக கைப்பற்றி ஆக்கிரமித்து வருகின்றன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
ரஷ்யாவின் குர்ஸ்க் பிராந்தியம் மீதான உக்ரைனின் தாக்குதல், இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், ரஷ்யாவுக்குள் வெளிநாட்டு இராணுவம் ஆக்கிரமிக்கும் முதல் சந்தர்ப்பம் என்று தெரிவிக்கப்படுகின்றது. முழு அளவிலான படையெடுப்புக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் உத்தரவிட்டு சுமார் இரண்டரை ஆண்டுகளுக்குப் பின்னர், உக்ரைன் எதிர்பாராத வளர்ச்சி இதுவென சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. உக்ரைனியப் படைகள் கடந்த செவ்வாய்கிழமை ரஷ்ய எல்லைக்குள் நுழைந்து ரஷ்யாவின் குர்ஸ்க் பிராந்தியத்தின் சில மேற்குப் பகுதிகளை கைப்பற்றியது. ரஷ்யாவுக்குள் உக்ரைனின் திடீர் ஊடுருவலின் போது பிரித்தானிய இராணுவ ஆயுத தாங்கிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
உக்ரைனின் தற்காப்புக்காக பிரித்தானியாவால் வழங்கப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்த முழு உரிமை உள்ளது என்று பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.
(எ-இ)

# இலங்கையருடன் பயணித்த சொகுசுக்கப்பல் மூழ்கியது!

## ஏழு பேரைக் காணவில்லை


உரோம், ஓக. 20
இத்தாலிக் கடற்பரப்பில், இலங்கையர்கள் உட்பட 22 பேருடன் பயணித்த சொகுசுக் கப்பல் கடலில் மூழ்கி விபத்துக்குள்ளானதில் 7 பேரைக் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இத்தாலியின் சிசிலி தீவில் ஏற்பட்ட சூறாவளி காரணமாகவே இந்த இடர் சம்பவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தாலியக் கடலோரக் காவற்படையினர் உடனடியாக மீட்புப் பணிகளை ஆரம்பித்தனர். 15 பேர் மீட்கப்பட்டு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். ஏழு பேரைக் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்களை மீட்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
(அ-ம)

## வேலையாட்கள் தேவை

- ஓட்டுனர் (Driving work)
- கணக்காளர் (Accounting work)
- உதவி முகாமையாளர் (Assistant Manager Post)

தொடர்புகளுக்கு:
Whatsapp No: 077 987 3391

## மரண அறிவித்தல்



தோற்றம் 21 . 08 . 1940
மறைவு 19 . 08 . 2024

### திரு சுப்பிரமணியம் தில்லைசிவலோகநாதன்

**(ஓய்வு நிலை S.S.O இ.போ.ச கோண்டாவில் சாலை)**

புத்தூர் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சுப்பிரமணியம் தில்லைசிவலோகநாதன் அவர்கள் நேற்று திங்கட்கிழமை (19.08.2024) அன்று இயற்கை எய்தினார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான சிவசிதம்பரம்-நாகம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற கெங்காதேவியின் ஆருயிர் கணவனும் இந்திரா (கொ/சேர் ராஸிக் பரீட் முஸ்லிம் மகளிர் கல்லூரி), சந்திரா (யா/ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம்), தெய்வரதி (யா/அச்சுவேலி தெரேசாள் மகளிர் கல்லூரி), Dr. சிவரதி (கனடா), றஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், மணிவண்ணன், இளங்கோ (யா/இடைக்காடு மகாவித்தியாலயம்), பாலரஞ்சன் (விவசாய அமைச்சு வடமாகாணம்), Dr அருணா (கனடா), சஞ்சீவன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலவானர், கலா பரமேஸ்வரன் மற்றும் நாராயண மூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவகாமிப்பிள்ளை, ரஞ்சனா, சாந்தநாயகி காலஞ்சென்றவர்களான சிவசுந்தரம், கமலாதேவி ஆகியோரின் மைத்துனரும், அட்சாஜினி, அம்சாஜினி, அக்ஷிலா, அபிருத், அனுஸ்கா, பானுஜா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2024) செவ்வாய்க்கிழமை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் கிந்துசிட்டி பொது இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

சுன்னாக வீதி,
புத்தூர் மேற்கு,
புத்தூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 1178) V-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 13 . 10 . 1947
மறைவு 19 . 08 . 2024

### அமரர் பத்மா சூடாமணி

இல. 205/2 கண்டி வீதி, அரியாலையை நிரந்தர முகவரியாகக் கொண்ட பத்மா சூடாமணி அவர்கள் நேற்று (19.08.2024) திங்கட்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற எழுத்தோவியர் தம்பிப்பிள்ளை சூடாமணி அவர்களின் அன்பு மனைவியும், அகிலன் (பிரதம கணக்காளர், வளிமண்டலவியல் திணைக்களம் - கொழும்பு), சுகுணா (லண்டன்), சியாமா (ஆசிரியர், யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருஷ்ணாளினி (ஆசிரியர், யா/திருக்குடும்பக் கன்னியர் மடம்), நந்தகோபன் (லண்டன்), சகிலன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், முல்லைத்தீவு) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கனகசிங்கம் மற்றும் தர்மகுலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கேசவராணி, இந்திராணி காலஞ்சென்றவர்களான கனகலட்சுமி, சிவனடியார், பரமசிவம், சிவமணி ஆகியோரின் மைத்துனியும், கவினேஷ், ஜெகனேஷ், சாரித்ரா, ஹர்னயா, ஹர்னியா, அயிகிரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.
இறுதிக்கிரியைகளுக்காக அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அன்னாரது பூதவுடல் நாளை மு.ப. 10.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 249 7266
0044 787 241 9841
076 291 7747

(CS/1176) J-1

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org